தமிழின

# விடுதலை

இதழ் — 18. ஆடிமாதம் (15.7.84) மாதம் இரு முறை — பக்கங்கள் — 8

## எமது எண்ணம்

### இலங்கை — இந்திய உறவு ஊசலாடுகிறது

### அது வெடிப்பாக மாறுமா?

இலங்கை ஜனாதிபதி ஜே.. ஆர் இந்த மாதம் முதலாம் திகதி இந்திராவுடன் பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டிருந்த போது இலங்கையிலிருந்து வெளிவரும் சிங்கள இனத்துவேஷ ஆங்கில ஏடான "சண்" பத்திரிகை ஒரு புதுமையான தலைப்பு இட்டு கட்டுரை ஒன்றை வரைந்தது.. அதாவது ஸ்ரீ லங்காவின் ஜனாதிபதி ஜே.. ஆர். அரசியல் குழப்பமும் அச்சமும் நிறைந்த ஒரு அரசியல் சூழ்நிலையில் சிங்கள மக்களின் அபிலாஷைகளை மூட்டையாகக் கட்டிக் கொண்டு புது டில்லிக்குப் போயிருக்கிறார் என்று அப்பத்திரிகை எழுதியது..

உண்மைதான். அவர் கட்டிக் கொண்டு போன அந்த அழுக்காறு மூட்டையை அன்னை திருமதி இந்திரா காந்தியின் முன்னால் அவிழ்த்துப் போட்ட போது அது சிதறிய நெல்லிக்காய் மூட்டையைப் போல உருண்டோடியதோடு அது சிங்களவரின் அபிலாஷைகளையும் ஜே.. ஆரின் எதிர் பார்ப்புகளையும் சிதறடித்து மூழ்கடித்து விட்டது. என்றே அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.. இதனால் இந்த சாட்சாத் ஜே.ஆர்.. தனது திக் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் அதிகம் அலட்டிக் கொள்ளாமல் நிஷ்டையில் மூழ்கியிருப்பதாகவும், அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள். அதாவது தமிழ் நாட்டில் தங்கியிருக்கும் தமிழீழ விடுதலைப் போராளிகளை எப்படியாவது இந்திரா அம்மையாரை மடக்கிப் பிடித்து, ஸ்ரீ லங்கா நாட்டுக்கு கொண்டு வந்து 1983 ம ஆண்டு ஜூலை மாதம் வெலிகடைச் சிறையில் வைத்துப் படு கொலை செய்தது போல தமிழ்நாட்டில் தங்கி வாழும் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளை இங்கே கொண்டு வந்து படு கொலை செய்து விட வேண்டும் என்பதுதான். சிங்கள மக்களது அபிலாஷைகளாகவும், எதிர்பார்ப்புகளாகவும் உள்ளடக்கப்பட்ட அந்த அழுக்காறு மூட்டையாகும். மலையிடைப் பிறவா மாமணிகளாக — அலையிடைப்பிறவா அமுதமாக — எம்மத்தியில் வாழும் கண்கண்ட தெய்வங்களான தமிழ் இளைஞர்களை — பல்லாண்டு காலம் ஒய்ந்து [illegible] பின் வராது வந்துற்ற மாமணிகளை — ஒழித்து கட்டி விட்டால் சிங்கள மக்களின் மத்தியில் இருக்கும் அச்சத்தையும் களைந்து விடலாம் எனக் கங்கணம் கட்டிக் கொண்டு இந்தியாவிக்கு ஓடிப்போன தர்மிஷ்ட சாமியாரின் குடுமிப்பிடியைப் பிடித்து ஒரு குலுக்கு குலுக்கி கழுத்தைப் பிடித்து அனுப்பி உள்ளார் இந்திரா காந்தி அம்மையார். இதையே வெரித்தாஸ் வானொலி விமர்சகர் குறிப்பிடும் போது அன்னை இந்திரா அம்மையார் எந்தக் கட்டத்திலும் விட்டுக் கொடுக்காத படி தனது பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளார் என்றார்..

அண்ணல் காந்தியின் அரசியல் அடிச்சுவடு தொட்டு அரசியல் கற்ற அன்னை இந்திராவிடம் — நேருவின் மகளான பிரியதர்சினியிடம் — தர்மிஷ்ட சாமியாரின் எந்தப் பாச்சாக்களுமே என்றுமே பலிக்காது.. இதனால்தான் அன்னை இந்திராவிடம் இந்தத் தடிச்சாமியார் மேற் கொண்ட கன்றடைப்புப் பேச்சு வார்த்தைகள் படு தோல்வியடைந்துள்ளதாக கலைஞர் கருணாநிதி அழகாகக் குறிப்பிட்டார் போலும்.. இன்று இலங்கை இந்திய உறவு மேலும் விரிசலடைந்துள்ளது.. அது ஊசலாடிக் கொண்டு இருக்கிறது.. கத்தி முனையில் நடப்பது போல் ஸ்ரீ லங்காவின் சிங்கள இனவாதிகள் இன்று விழி பிதுங்கிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தக் திரிசங்கு சொர்க்க நிலையில் ஏற்பட்ட பிதற்றல்தான் சர்வதேச பயங்கர வாதம் என்று மாராப்பு மூட்டையை அவர்கள் முன்னிலைப்படுத்த அவர்களைத் தூண்டியுள்ளது. சர்வதேசப் பயங்கர வாதம் என்று அலட்டுவதன் மூலம் இந்திய அக்கறையைப் புறக்கணிக்கவும் சர்வதேச பயங்கர வாதிகளினது உதவியைப் பெற்று அதாவது இஸ்ரேலிய மொசாட், பிரிட்டிஸ் எஸ்.ஏ.எஸ்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலிப்படைகளை இங்கு எப்படியோ வரவழைத்து தமிழ் இளைஞர்களை ஒழித்துக் கட்டி விடுவதன் மூலம் எமது ஈழ விடுதலைப் போரை நசுக்கி விடலாம் என ஸ்ரீ லங்காவின் பாசிச அரசு மனப்பால் குடிக்கிறது.

இன்று ஸ்ரீ லங்காவின் பாசிச ஆட்சிக்கு இலங்கைத் தீவு முழுவதும் சிம்ம சொப்பனமாக இருக்கும் ஒரே ஒரு போராட்ட சக்தி தமிழ்த் தீவிர வாதிகள்தான். அவர்களை எப்படியாவது அழித்து ஒழித்துக்கட்டிவிட்டால் " அரசியல் தீர்வு" என்ற போர்வையில் விருப்பம் போல் கட்டளையிலையும் தனது கைக்குள் போட்டுக் கொண்டு தமிழ் இளைஞர்களினதும், தமிழ் மக்களினதும் அபிலாஷைகளை எந்த வகையிலுமே திருப்திப் படுத்தாதும் அதே நேரம் பௌத்த பிக்குகளினதும், சிங்களத் தீவிரவாதிகளினதும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதுமான " அந்த அரசியல் தீர்வை" தமிழ் மக்கள் மீது திணித்து ஏதோ ஒரு வகையில் சரிக்கட்டி விடலாம் என நப்பாசை கொண்ட தர்மிஸ்ட சாமியார் உள்ளூர ஒரு இராணுவத் தீர்வையே நாடி நிற்கிறார்.

அதனால் சிங்கள மக்களின் அபிலாஷைகளின் என்ற போர்வையில் தமிழ் மக்கள் மீது சிங்களவர்களின் கொலைவெறி காழ்ப்புணர்வுகளை மூட்டையாகக் கட்டி அடுக்கு மாராப்பு போடும் முயற்சியில் இறங்கிவிட்டுத் திரும்பியுள்ளார், அங்கு பல வழிகளிலும் இந்திரா அம்மையாரை, அவரை பணியப்பார்த்த முக்குடைப்பட்ட நிலையில் தர்மிஸ்ட சாமியார் தமது நாட்டுக்குத் திரும்பி மௌன சாமியாராக திருக் கோலம் பூண்டு நிஷ்டையில் ஆழ்ந்து இருப்பதாக அரசியல் அவதானிகள் கருதுகிறார்கள்.

கடந்த ஆடிக்கலவரத்தின் போது நிலவரம், இழந்த தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிகப்பயங்கர கொடுமைகளால் உடல்புண்பட்டோரும் சிங்களவர்களுக்கு உள்ளாகியோரும் பெரிய புண்கள் இன்னும் சீழ் வடிந்து கொண்டே உள்ளன. பெற்றோரை உற்றார் உறவினர்களை உடன் பிறப்புகளை இழந்த தமிழ் மக்களது மனப்புண்கள் இன்னும் புரையோடிப் போன புண்களாகவே உள்ளது. இதைவிடத் தமக்கு அடுத்த நிமிடம் அரச பயங்கரவாதிகளினால் என்ன நேருமோ என அச்சத்தில் தமிழ் மக்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டே இருக்கிறார்கள். இந்த நிலையில் தான் வட்ட மேசை மாநாடு, " அரசியல் தீர்வு" என்ற போர்வையில் சிங்களத் தீர்ப்புகளுக்கு வடிவம் கொடுக்க கூட்டப்பட்ட அனைத்துக் கட்சி மகாநாடு என்ற தொடர் நாட்டிய நாடகம் இடையில் கருச்சிதைவுப்பட்டு முற்றுப் பெறுமலே படு தோல்வியை அடைந்து முடிவு கொண்டது.

அதன்பின் இந்தியப் பிரதமரின் சிறப்புத் தூதுவர் மூலம் முன் வைக்கப்பட்ட போது ஜே. ஆரினால் ஒப்புக் கொள்ளப்பட்டு " அநுபந்தம் -சீ" என்ற பிரேரணையாக வட்ட மேசை மகாநாடு வரும் வரை அந்தப் பிரேரணையை பௌத்த குருமார்களும் மகாபீடங்களும் முற்றாக நிராகரித்து விட்டதாக இப்போது தர்மிஸ்ட சாமியார் ஒப்புக் கொள்ள வேண்டிய சங்கடமான நிலைக்கு ஆளாகியுள்ளார். இதன் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு என்ற கடைசி ஆயுதம் பயனற்றுப் போய்விட்டது. இந்திராவுடனான சமாதான வழிகளிலான பேச்சு வார்த்தையின் இறுதி முயற்சி தோல்வியில் முடிந்து போய் விட்டது. இந்த நிலையில் ஜே. ஆர் ஒரு புதிய யோசனையை முன் வைத்துள்ளார். அதாவது இரண்டாவது சபை அமைக்கும் யோசனை. இது காலத்தை இழுத்தடிக்க விட போடப்பட்ட ஒரு யோசனை. அதாவது இப்போது ஒரு பாராளுமன்ற ஆசனம் இழந்துள்ள தமிழ்ப் பிரதிநிதிகளை இன்னும் கொஞ்சக் காலத்திற்கு அரசுக்கு அடுத்த என்ன விதமான பேய்க்காட்டலைச் செய்யலாம் என எண்ணும் தர்மிஸ்ட சாமியார் இப்படியும் ஒரு சர்க்கஸ் கூடாரத்தைப் போட்டு டமாரம் அடிக்கத் தொடங்கியுள்ளார், எந்தப் பேச்சாலும் அந்தப் பாச்சா இன்றைய தமிழ் இளைஞர்களிடம் பலிக்காது என்பது மட்டும் உறுதி.

இது ஒருபுறமிருக்க இஸ்ரேலிய மொசாட் படைகள் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப்பார்த்த பின்பு தமிழ்ப் புலிகள் நீருடன் இரண்டறக் கலந்து வாழும் நிலையில் மீனைப் போல் தமிழ் மக்கள் மத்தியில் அந்நியமாக வாழும் விடுதலைப் புலிகளையும் சாதாரண தமிழ்ப் பொது மக்களையும் தம்மால் இனம் கண்டு வேறுபடுத்த முடியாமல் இருப்பதாக அறிக்கை ஒன்றைக் கொடுத்துள்ளதாக எமக்கு நம்பத் தகுந்த வட்டாரங்களில் இருந்து தகவல் கிடைத்துள்ளது, பாலஸ்தீனியர்கள் முகாம்களில் தங்கியிருப்பதால் அவர்களை முறியடிக்க தம்மால் சாத்தியமானது போல் தமிழ் நிலத்தில் முடியாது என்றும் இஸ்ரேலியர்கள் கூறியிருக்கிறார்களாம்.

அத்தோடு தமிழ் கெரில்லாக்களை எந்தப் போரிலும் சிங்கள இராணுவத்தால் வெற்றி கொள்ள முடியாது என்றும் கூறியுள்ளார்கள். இதையே முன்னைய இராணுவத் தளபதி பிரிகேடியர் வீரதுங்காவும் 31.7.83 " சண்டே ரைம்ஸ்" இதழுக்கு கொடுத்த பேட்டியில் ஒப்புக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று மட்டும் நிட்சயம். தமிழ்த் தீவிரவாதிகள் தமது பலத்தை நன்றாகப் பெருக்கி விட்டார்கள். அது மக்கள் இயக்கமாகிவிட்டது. இனி எந்த மொசாட் படையாலும் சரி, கூலிப்படையாலும் சரி தமிழ் நிலத்தில் காலடி எடுத்து வைக்கும் போது தனது சவப் பெட்டியையும் தானே கையில் எடுத்துக் கொண்டு தான் நுழைய வேண்டும். என்பது உறுதியாகி விட்டது. தொடர்ந்தும் தமிழ் மக்கள் விடுதலைப் போராளிகளின் கவசமாகவிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டியது தமிழ் மக்களின் முக்கிய கடமையாகும்.

— ஆசிரியர். —

- ஒரு கண்ணோட்டம் -

## நியூயோர்க் தமிழ் மாநாடு

நியூயோர்க் மாநகரில் அண்மையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாடு தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறது என்பது எவருக்கும் புரியவில்லை.

இரண்டு வருடங்களுக்கு முன்பு நடைபெற்ற உலக தமிழீழ மாநாடு-தமிழர் கூட்டணிக்கும் தமிழீழத் தீவிரவாதிகளுக்கும் மோதலுக்குரிய ஒரு களமாகி பின்பு எவ்வளவோ சிக்கல்களுக்கு மத்தியில் பல அரிய தீர்மானங்களை பல இழுபறிகளுக்கிடையில் நிறைவேற்றியது, ஆயினும் அத்தீர்மானங்கள் எதுவும் செயலுருவம் பெற்றதாக நாம் அறிந்தமட்டில் இல்லை. தமிழர் கூட்டணியும், தமிழீழ விடுதலை அணியையும் இணைத்து வைக்கவென அமெரிக்காவில் இருந்து தமிழீழத்திற்கு வந்த அன்றைய மாநாட்டின் நடவடிக்கைக் குழு உறுப்பினரான டாக். ஜெகதீசன் அவர்கள் இங்குள்ள நிலையினை நன்றாக ஆராய்ந்து தமிழீழ விடுதலை அணியின் விடுதலைக்கான செயற்பாடுகளை ஏற்றுக் கொண்டு கூட்டணியின் நிலையில் மாற்றம் வேண்டும் என்றும், திரு அமிர்தலிங்கம் அவர்களுடன் பேசிவிட்டு வருகிறேன் என்று சென்றவர், திரும்பி வந்து அமிர் எதற்கும் விட்டுக் கொடுக்கின்றார் இல்லை. ஏதோ நீங்களாவது செயல்படுங்கள். எம்மால் முடிந்த உதவியைச் செய்கிறோம் என தமிழீழ விடுதலை அணியினருக்கு கூறிச் சென்று விட்டார். அதன் பின் கடந்த மநாட்டில் தெரிவு செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் பேரவை (கவுன்சில்) தமிழீழத்தில் மேற்கொண்ட நடவடிக்கை தான் என்ன?

இவர்கள் தமிழீழத்திற்கு வெளியே சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம். தமிழீழ மண்ணில் இன்று மக்கள் மத்தியில் செய்ய வேண்டிய விடுதலைக்கான வேலைகள் நிறைய உண்டு. இன்று மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலமைக்கேற்ப மக்களை வழி நடத்த சரியான தலைமை தமிழீழத்தில் எதுவும் இல்லை. எனவே தமிழீழ விடுதலை பேரவை தமிழீழத்தில் கவனம் செலுத்துவது முக்கியம் என நாம் கருதுகிறோம். அது மட்டுமல்ல தமிழீழத்தில் செய்ய வேண்டிய விடுதலைக்கான நடவடிக்கைகளை பேரவை முடிவெடுக்கும் பட்சத்தில் தமிழீழ விடுதலை அணி செய்யத் தயாராக உள்ளது எனவும் இதற்கான வேலைத் திட்டமொன்றையும் அதற்குரிய வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறும் கேட்டிருந்தும், இக் கோரிக்கைக்கு இது வரை பதில் எதும் இல்லை.

எனவே இம்முறை நடைபெற்ற மாநாட்டு தீர்மானங்களாவது செயலுருவம் பெற வேண்டும் என்பது எமது பேரவா.

இம் மாநாட்டிற்கான வேலைகள் முன்நின்று செய்துள்ள டாக். பஞ்சாட்சரம் அவர்களது முயற்சியை நாம் பெரிதும் பாராட்டுகிறோம். அவர் முயற்சி அவர் செலவு செய்யும் பணம், வீணாகக் கூடாதே என்பதற்காகத்தான் இதனைக் கூறுகிறோம்.

ஜே. ஆர் இந்திரா பேச்சு வார்த்தை காரணமாக நாமும் இந்தியாவில் இருக்க வேண்டுமென திரு. அமிர்தலிங்கம் இம்முறை மாநாட்டிற்கு செல்லவில்லை. கடந்த முறையைப் போலல்லாது கூட்டணியுடன் மோதக்கூடிய கருத்துகளை இம்முறை கூட்டணி சார்பில் கலந்து கொண்ட வ. பொன்னம்பலம் அவர்கள் தெரிவிக்கவில்லை. மாநாட்டில் ஏகமனதாகவே தீர்மானங்கள் யாவும் எடுக்கப்பட்டதாக பத்திரிகைகள் வாயிலாக அறிந்தோம். மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் முக்கியமானது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு கூட்டுத் தலைமை ஒன்று அவசியமாகும் என்பது தான். தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு நெருக்கடியான இவ்வேளையில் இயக்கங்கள் தனித்தனியே பிரிந்து நின்று எதையும் செய்ய முடியாது என்பதை யாவரும் உணர்ந்து கூட்டாக செயல்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இத் தீர்மானம் எடுக்கப்பட்டது. மிகவும் வரவேற்கத் தக்கதே. இதனைச் செயல்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். உடனடியாக இதற்கென்த் தெரிவு செய்யப்பட்ட செயற்குழு தமிழகம் வந்து அங்குள்ள தீவிரவாத இயக்கத் தலைவர்களை அழைத்து இதுபற்றிப் பேசி கூட்டுத் தலைமை ஒன்றை உருவாக்கி உலக நாடுகளிலுமுள்ள சகல தமிழ் மக்களிடமிருந்து நிதி சேகரித்து கூட்டுத் தலைமையில் இணைந்துள்ள இயக்கங்களுக்கு வழங்கவென பொது நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்படல் வேண்டும். இயக்கங்களின் [illegible] வாய்ப் [illegible] (6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏன் இந்த கொரில்லா தாக்குதல்

---

ஒடுக்கப்பட்ட ஓர் இனம் தனது ஒடுக்கு முறைக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடும் போது சிறிய அளவிலான பலத்துடன்தான் போராடுகிறது. ஒடுக்கப்பட்ட முழு இனத்திலும் உள்ள ஒரு சில இளைஞர்கள்தான் முதலில் தங்களுடைய நிலையைச் சிந்திக்கிறார்கள். அவர்கள்தான் முதலில் தாங்கள் ஏதோ ஒரு விதத்தில் சேகரித்துக் கொண்ட ஒரு சில ஆயுதங்களுடன் போராடுகிறார்கள். இந்த நிலையில்தான் எமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எம்மை அடக்கி ஆளுகின்ற பௌத்த சிங்கள ஏகாதிபத்தியம் தான், ஒரு நாட்டின் அரசு என்கிற முத்திரையை பெற்றுக் கொண்டு, எம்மைக் கொன்று ஒழிப்பதற்கு உலக நாடுகளிடம் இருந்து பகிரங்கமாக சகல ராணுவ உதவிகளையும் பெறக் கூடிய நிலையில் உள்ளது.

நாமோ சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஒடுக்கு முறைக்கெதிராக போராட முற்படும் போது எம்மீது பயங்கரவாதிகள் என்ற கறுப்பு முத்திரையைக் குத்தி உலக நாடுகளின் கண்ணில் இருந்து மறைத்துவிட முயற்சிக்கும் அதே வேளையில் எமக்கு வெளியாரிடம் இருந்து ஓர் உதவியும் கிடைக்க விடாமல் தடுத்தும் விடுகிறது. எனவே இந்நிலையில் நாம் எதிரியுடன் போராட வேண்டுமாயின், எமது சிறிய பலத்துடன் மறைந்திருந்து தாக்கும் கொரில்லா முறை யுத்தத்தைத்தான் முதலில் செய்ய வேண்டும். இந்த யுத்த முறையால் கொரில்லா போராளிகள் மிகமுக்கியமான இரண்டு நன்மைகளை அடைகிறார்கள்.

முதலாவது:- எதிரி எதிர் பார்க்காத ஒரு நேரத்தில் மூர்க்கத்தனமாக எதிரிகள் பிரயாணம் செய்கின்ற ஒரு வாகனத்தைத் தாக்கும் போது, எதிரியின் ஆள் பலம் குறையும் அதே வேளையில் தாக்குதலுக்கு உள்ளாகிய இராணுவ வீரர்கள் வைத்திருந்த ஆயுதங்களையும் கொரில்லாக்கள் பெறக் கூடியதாகவிருக்கின்றது. அத்துடன் இத்திடீர்த் தாக்குதலினால் எதிரி தன் உள்ளத்தில் என்றுமே ஏற்பட்டிராத பயத்திற்கு உள்ளாகிறான். இந்தப் பயத்தின் காரணமாக எதிரி ராணுவம் கொரில்லாக்களுக்கெதிரான தாக்குதலில் இருந்து பின்வாங்க முயற்சிக்கிறது. இந்தப் பயம் தான் இன்று சிங்கள ஏகாதிபத்தியத்தின் கூலிப் பட்டாளத்தின் குலை நடுக்கத்திற்குக் காரணமாக இருக்கின்றது. உள்ளத்தில் பயம் உடையவன் எந்த நவீன ஆயுதத்தைப் பெற்றுக் கொண்டாலும் போராட முடியாது.

இரண்டாவது:- எதிரியுடனான திடீர்த் தாக்குதல் மூலம் அடையும் வெற்றியைக் கொண்டு, மக்களிடத்தில் ஆயிரம் கருத்தரங்கள் மூலம் செய்ய முடியாத பிரச்சாரத்தை தங்கள் செயல்மூலம் இவர்கள் செய்து விடுகிறார்கள். வெற்றித் தாக்குதலைக் கண்ட பொது மக்கள் தாக்குதல் நடத்திய கொரில்லா இயக்கம் மீது அன்பும் நம்பிக்கையும் கொள்கிறார்கள். இந்த நம்பிக்கையின் காரணமாக கோழைகளாக இருந்த இளைஞர்கள் எல்லாம் திடீர் வீரர்களாக மாறி கொரில்லா இயக்கத்துடன் சேர்ந்து ஒடுக்கு முறையாளனுடன் போராட ஆயிரமாயிரமாக முன் வருகிறார்கள். இதன் மூலம் சிறு தொகையாக இருந்த கொரில்லாக்கள் பெருந் தொகையினராவதுடன் எதிரிகளிடம் இருந்து பறிக்கும் ஆயுதங்களைக் கொண்டு ஆயுத பலமும் அடைகிறார்கள்.

இவைகளில் இருந்து நாம் தெரியக்கூடியது என்னவென்றால் முதலில் எதிரியின் பலத்தைக் குறைத்து அவனைப் பலவீனப்படுத்தி அவன் எமக்கு எதிராகப் போராடச் செய்யாமல் எமது மண்ணில் இருந்து விரட்டும் அதே வேளையில், அவன் தனது தேசிய வருமானம் அத்தனையையும் செலவழித்து வாங்கும் நவீன ராணுவ ஆயுதங்களை எமது வருமானங்களில் இருந்து ஒரு சதமும் செலவழிக்காமல் எமது கொரில்லாக்கள் அவ்வாயுதங்களை சிங்கள இராணுவத்திடம் இருந்து அபகரித்து தங்கள் பலத்தைக் கூட்டிக் கொண்டு, எமது மண்ணில் இருந்து எமது எதிரியை விரட்டி அடிக்கும் காலநிலை உருவாவதை காணக்கூடியதாக இருக்கிறது. அத்துடன் விடுதலைப் போராட்டம் என்றால் என்னவென்று தெரியாமல் காலம் கடத்திய எம்மக்கள் கூட்டத்தைச் சிந்திக்க வைத்து விடுதலைப் போராட்டத்தின் பக்கம் இழுத்து ஒரு வீரம் செறிந்த மக்கள் கூட்டமாக உருவெடுக்கவைத்து அடிமைத் தனத்துக்கு எதிராகவும், தனது சுதந்திரத்திற்காகவும் மரணத்தை மறந்த நிலையில் போராட வைப்பதையும் காணக் கூடியதாக இருக்கிறது.

எனவே எண்ணிக்கையில் குறைந்த போராளிகளின் போராட்ட ஆரம்பம் கொரில்லாப் போர் முறையே. இதுவே நாளடைவில் வளர்ச்சியுற்று முழுமையான மக்கள் போராட்டமாக உருவெடுக்கின்றது.

## சற்றடே றிவியூ வழக்கு தள்ளுபடியின் பின்னணியில் ......

---

சற்றடே றிவியூ என்ற யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஆங்கில வார ஏட்டிற்கு ஸ்ரீ லங்கா அரசு இடைக்காலத் தடையுத்தரவு வழங்கியதை ஆட்சேபித்து தொடரப்பட்ட வழக்கு செலவுத் தொகையின்றி தள்ளுபடி செய்யப்பட்டது. இவ்வழக்கில் சற்றடே றிவியூ பத்திரிகை மீது தடை விதிக்க காரணமாயிருந்ததென அரசினால் சுட்டிக் காட்டப்பட்ட சில விடயங்களைக் கீழே தருகிறோம்.

* சற்றடே றிவியூ என்ற இப்பத்திரிகை ஓர் அரசியல் பத்திரிகை. இது நாட்டைப் பிரித்து வடக்கு, கிழக்கு பகுதிகள் வாழும் தமிழர்களுக்கென தமிழீழமென்ற தனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டை உருவாக்கப் போராடுபவர்களுக்கு ஆதரவளிக்கிறது.

* தமிழீழ விடுதலை அணி என்ற தீவிர வாத குழுவினருக்கு இப்பத்திரிகையில் முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் இது போன்ற இயக்கங்கள் வளர்ச்சியடைவதற்கு வழி செய்துள்ளது.

* 1.7.83இல் தமிழீழ விடுதலை அணியால் ஏற்பாடு செய்யப்பட்ட ஹர்த்தாலும் அதனைத் தொடர்ந்து அரசுக்கு ஏற்பட்ட பாரிய நஷ்டமும் வன்முறைகளும், தீவிர வாத நடவடிக்கைகளும், இச் செய்திகள் பரவாது தடுப்பதற்காக இப்பத்திரிகை தடை செய்யபட்டது.

* அரசின் அவசர கால நிலைப் பிரகடனம் 18.5.83 மாலை 5 மணிக்கு செய்யப்பட்ட பின், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடைபெற்ற அன்றைய தினத்தில் கந்தர்மடத்தில் இளைஞர்கள் சிலர் இராணுவத்தினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து கோப்பிரல் ஜெயவர்த்தனவை கொலை செய்தனர். மற்றும் சில இராணுவத்தினரை காயப்படுத்தினர். இதனால் இராணுவத்தினர் கந்தர்மடத்திலுள்ள அரசடி வீதியில் உள்ள 64 வீடுகளுக்கும் வாகனங்களுக்கும் தீயிட்டு கொளுத்தினர். இச் செய்திகள் 21.5.83 அன்றைய பத்திரிகையில் முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டது.

* வவுனியாவில் இரு விமானப் படையினர் தீவிரவாதிகளால் சுடப்பட்டதைத் தொடர்ந்து வவுனியாவில் உள்ள காந்தீயம் பண்ணையும் வவுனியா நகரத்திலுள்ள சில கடைகளும் தீயிடப்பட்ட செய்தியை 4.6.83 திகதியின் இப்பத்திரிகை வெளியிட்டது.

* 11.6.83 அன்று ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்த போது கிழக்கு மாகாணத்தில் திருகோணமலையில் பா.உ. சம்பந்தன் அவர்களின் இல்லத்திற்கு கைக்குண்டு வீசப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் ஆயுதப்படையினர் அல்லது கூலிக்கமர்த்தப்பட்ட காடையர்கள் சம்பந்தப்பட்டுள்ளதாக இப் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

* 21.5.83 இல் வெளி வந்த இதழில் அவுஸ்ரேலியாவில் ஈழத் தமிழர் கழகம் தமிழர் கூட்டணி செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களுக்கு எழுதிய கடிதத்தை பிரசுரித்தன் மூலம் அரசுடன் கூட்டணியினர் மேற்கொண்டு வந்த சமாதான நடவடிக்கைகளை அல்லது அரசுடன் கூட்டணியினருக்கு ஏற்பட்ட இணக்கத்தை தலைவர் " தமிழ் மக்கள் உங்களுக்கும், உங்கள் பா.உ. க்களுக்கும், தமிழீழத்தை அமைப்பதற்கு ஆணை தந்தார்களே ஒழிய, தமிழீழத்திற்கு குறைந்த எதையும் ஏற்கவோ, அல்லது அதன் அடிப்படையில் அரசுடன் இணக்கம் காணவோ பின் கதவால் சென்று அற்ப சலுகைகள் பெறவோ அல்லது மாவட்ட சபையைப் பற்றி பேசவோ உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது " என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஸ்ரீ லங்கா அரசின் கண்ணோட்டத்தில் பத்திரிகைகள் உண்மையான செய்திகளை வெளியிடக் கூடாது. அரசுக்கெதிரான தமது உரிமைகளுக்காக போராடும் போராளிகளைப் பற்றி எழுதக் கூடாது. அரசுடன் இணக்கப் பேச்சுகளை நடாத்துபவர்களையும் இணங்கிப் போவோர்களைப் பற்றியும் அவர்களுக்கு எதிராக கருத்து வெளியிடக் கூடாது. தம் இஷ்டம் தானே இன்று நடக்கிறது.

## ஆடி 25 ஆம் நாள் துக்க தினம்.

தமிழர்களைக் கடந்த ஆடியில் படு கொலை செய்ததுடன் தமிழீழ விடுதலைப் போராளிகளை வெலிகடைச் சிறையில் வைத்து படு கொலை செய்த தினமாகிய ஆடி 25 ஆம் நாளை துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டுமென நியூயார்கின் தமிழீழ மாநாடு தீர்மானித்துள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியும் இந்நாளில் சாத்வீக முறையில் துக்க தினமாக அனுஷ்டிக்குமாறு கோரியுள்ளது.

## ஆடி 15 ஆம் நாள் (இன்று) சீலன் மறைந்து ஓராண்டு பூர்த்தி.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னணிப் போராளிகளான வாக்கஸ் சாள்ஸ் அன்ரனி எனப்படும் சீலனும், அருள்நாதன் எனப்படும் ஆனந்தனும், இனத் துரோகிகளால் காட்டிக் கொடுக்கப்பட்டு ஸ்ரீ லங்கா கூலிப்படைகளால் மீசாலையில் வைத்துக் கொல்லப்பட்டது கடந்த ஆண்டு இதே தினத்தில்தான். சீலனின் வரலாறு தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கு ஒரு முன்மாதிரியாகும். சீலனும், ஆனந்தனும் ஸ்ரீ லங்கா இராணுவத்தினரால் நெஞ்சில் குண்டடி பட்டு விழுந்த போதும் தம்மை உயிருடன் பிடித்தால் இயக்கத்திற்கு தம்மால் ஆபத்து ஏற்படக் கூடாதென்பதற்காக சக போராளியை தம்மைச் சுட்டுக் கொல்லுமாறு கூறி மரணத்தை வலிய ஏற்றுக் கொண்டவர்கள்தான். சீலனும், ஆனந்தனும். சீலன் இறக்கும் போதும் தன் சக போராளிகளிடம் " இயக்கத்தைக் காட்டிக் கொடுத்து விடாதீர்கள்! துப்பாக்கியைக் கவனமாக ஒளித்து வையுங்கள்" என்று கூறினன். சீலனைப் போன்றவர்கள் தான் ஒரு இராணுவ இயக்கத்திற்கு முதுகெலும்பு போன்றவர்கள்.

விடுதலைப் புலிகளின் மற்றொரு முன்னணிப் போராளி செல்லக்கிளி. இவர் கடந்த ஆடி மாதம் 23 ஆம் திகதி திருநெல்வேலியில் நடைபெற்ற இராணுவத் தாக்குதலின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது 13 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தின் போது ராணுவத்தால் கொல்லப்பட்டார். இவரையும் இவ்வேளையில் நினைவு கூர்ந்து எமது அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

## பயங்கரவாதத்தை ஒழிக்க அமெரிக்கா உதவி.

தமிழீழ விடுதலைப் போராளிகளை பயங்கரவாதிகள் என பட்டம் சூட்டி, அவர்களை ஒழிக்க அமெரிக்க றீகன் ஆட்சி ஸ்ரீ லங்காவிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி வழங்கி வருவதை நாம் பல தடவைகளில் எமது இதழ் மூலம் அம்பலப்படுத்தி இருந்தோம். ஸ்ரீ லங்கா ஜனாதிபதி ஜே. ஆரின் அமெரிக்க விஜயத்தின் பின் அமெரிக்கா வெளிப்படையாக ஸ்ரீ லங்கா அரசுக்கு உதவி செய்யவிருப்பதாக 5.7.84 சண் பத்திரிகை செய்தி கூறுகிறது. மேலும் அச்செய்தியில் " ஐ-நா. பயங்கரவாத ஒழிப்பு பிரிவொன்றை ஆரம்பிக்க வேண்டுமென்ற ஜே. ஆரின் வேண்டுகோளை ஐ.நா. சபையில் அமெரிக்கா முன் வைக்க உள்ளதெனவும் வேண்டிய சகல வழிகளிலும் பயங்கரவாத ஒழிப்புக்கு அமெரிக்கா தயாராக உள்ளதெனவும் இப்பிரச்சினையால் அமெரிக்கா மிகவும் கவலையடைந்து உள்ளதெனவும் றீகனின் தேசிய பாதுகாப்பு செயலாளர் மைக்கல் பாரின் குறிப்பிட்டுள்ளார். ஸ்ரீ-லங்கா அரசுக்குத் தேவையான உதவிகள் பற்றியும் தேவையான திட்டங்கள் தயாரிக்கவும், இலங்கைத் தூதர் ஏனஸ்ட் கொரியா ஈடுபட்டுள்ளார் என அப்பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

## தமிழினப் படுகொலையின் ஓராண்டு பூர்த்தி.

கடந்த வருடம் ஆடி மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் ஒரு மாத காலம் வரை இலங்கைத் தீவில் வாழும் தமிழ் பேசும் மக்கள் மீது ஐ.தே.க. அரசினாலும் சிங்கள பேரினவாத குண்டர்களாலும் நடாத்தப்பட்ட இனவெறித் தாக்குதலின் போது வெலிகடைச் சிறையில் வைத்துக் கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் போராளிகளுக்கும் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்ட தமிழ் பேசும் மக்களுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொளவதுடன், கோடிக் கணக்கில் தமது பொருட்களைப் பறி கொடுத்த வர்த்தகர்களுக்கும் பொது மக்களுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## தங்கத்துரை – குட்டிமணி – ஜெகன் – டாக்.இராஜசுந்தரம் ஆகியோருக்கும் ஏனைய போராளிகளுக்கும் அஞ்சலி.

தமிழீழ விடுதலைப் போராளிகளின் 53 பேர் கடந்த ஆடி மாதத்தில் வெலிகடை சிறையில் வைத்து கொலை செய்யப்பட்டனர். இவர்களில் முன்னணிப் போராளிகளாக தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன், டாக். இராஜசுந்தரம் என்போரைக் குறிப்பிடலாம். இவர்களது இழப்பு தமிழினத்துக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் தங்கத்துரை அவர்கள் சக தமிழீழ விடுதலை இயக்கங்களின் தோழர்களால் அன்புடன் தங்கண்ணா என அழைக்கப்பட்டவர். இவரது சொல்லுக்கு ஏனைய இயக்கங்களின் தலைவர்கள் மதிப்பளித்ததை யாவரும் அறிவர். இயக்கங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகளுக்கு மத்தியில் அனைவரையும் ஒன்றிணைத்து செயல்படக்கூடிய சக்தி வாய்ந்த மனம் படைத்த தங்கண்ணா அவர்களது இழப்பு விடுதலையை விரும்புவோர்களாலும் இயக்கங்களின் ஒற்றுமையை வேண்டி நிற்போராலும், ஜீரணிக்க முடியாததாகும்.

தங்கண்ணா அவர்களது வலது கரமாக விளங்கியவரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலதிபருமான குட்டிமணி அவர்களது இழப்பும் ஈடு செய்ய முடியாதது, இது போன்றதே ஜெகன் அவர்களது இழப்புமாகும்.

டாக். இராஜசுந்தரம் அவர்கள் காந்தீய அமைப்பின் செயலாளர். இவர் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினதும், அதன் தலைவர் உமா மகேஸ்வரனினதும் நெருங்கிய சகா ஆவார். தமிழ் மண் பறி போவதைத் தடுக்க தமிழ் மக்களை தமிழீழத்தின் எல்லைப் புறத்தில் குடியேற்ற வேண்டுமென வாய் கிழிய மேடையில் கத்திய தலைவர்களைப் போலல்லாது தமிழ் மக்களின் குடியேற்றத்தினை எல்லைப் புறங்களில் மேற் கொண்டதுடன் 1977 இல் மலையகத்திலிருந்து இடம் பெயர்ந்த மலையகத் தமிழர்களுக்கு வாழ்வளித்த பெருமை இவரையே சாரும். ஆரம்ப கால கட்டங்களில் விடுதலை இயக்கங்களிடையே அதிகம் பிளவு ஏற்படாத நிலையில் உமா – பிரபா கோஷ்டியை ஒன்றிணைக்க அரும்பாடுபட்டவர். இவரது இழப்பும் ஈடு செய்ய முடியாததாகும்.

பெயர் குறிப்பிடாவிடினும் தமிழீழ விடுதலைக்காக போராடிய ஏனைய போராளிகளுக்கும் எமது சிரம் தாழ்த்தி அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வேளையில் தமிழீழ விடுதலை இயக்க செயலதிபர் குட்டிமணி அவர்கள் ஸ்ரீ லங்கா நீதிமன்றத்தில் அளித்த வாக்கு மூலத்தில் " ஒரு குட்டிமணியை நீங்கள் தூக்கிலிடலாம், ஆனால் தமிழ் ஈழ மண்ணில் ஆயிரம் ஆயிரம் குட்டிமணிகள் உருவாவதை உங்களால் தடுக்க முடியாது" என்று குறிப்பிட்டதை நினைவு கூருகிறோம். ஸ்ரீ லங்கா அரசே குட்டிமணி அவர்கள் கூறியதைப் போன்று " ஆயிரம் ஆயிரம் வீரத் தமிழ் இளைஞர்கள் விடுதலைத் தீயில் குதித்து உள்ளனர். இவர்கள் தமிழீழத்தை சுதந்திர நாடாக்கும் வரையில் ஓய மாட்டார்கள்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடைகளைத் தாண்டி ஒலிக்கின்ற தமிழீழத்தின் குரல்

ஸ்ரீ லங்கா அரசின் இடையூறுகளையும் தடைகளையும் வெற்றிகரமாக முறியடித்து தமிழீழ மக்களின் விடுதலைக் குரலாக — தமிழீழ வரலாற்றையும் செய்திகளையும் — புரட்சிக் கருத்துகளையும் தாங்கி 4 அலை வரிசைகளில் வான் அலைகளில் தவழ்ந்து வருகிறது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் அதிகார பூர்வ ஒலிபரப்பான தமிழீழத்தின் குரல்.

## ஒலிபரப்பு அலைவரிசைகள்.

ஒலிபரப்பு 1. 90 மீ - 3500 KHZ , 41 மீ - 7300 KHZ

ஒலிபரப்பு 2. 41 மீ - 7090 KHZ

ஒலிபரப்பு 3. 41 மீ - 7120 KHZ

## குறிப்பு

ஏதாவதொரு அலைவரிசையில் எமது ஒலிபரப்புத் தடைப்பட்டால் உடனடியாக உங்கள் வானொலி மீட்டரை எமது அடுத்த அலைவரிசைக்கு சிறிது நகர்த்தி எமது ஒலிபரப்பைத் தெளிவாகக் கேட்கலாம்.

## நிகழ்ச்சி நிரல்

சனி, ஞாயிறு காலை - 7.00 - 800 மணி வரை தமிழ் ஒலிபரப்பு. 8.00 - 830 மணிவரை ஆங்கில ஒலிபரப்பு. 8.30 - 9.00 மணிவரை சிங்கள ஒலிபரப்பு.

சனி, ஞாயிறு மாலை - 4.00 - 500 மணிவரை தமிழ் ஒலிபரப்பு. 5.00 - 530 மணிவரை ஆங்கில ஒலிபரப்பு. 530 - 6.00 மணிவரை சிங்கள ஒலிபரப்பு.

## ஸ்ரீ லங்கா சிங்கள ஒலிம்பிக் குழு வீரர்களுக்கு மிரட்டல் கடிதம்.

லொஸ் ஏஞ்சல்சில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டால் அவர்கள் கொல்லப்படுவார்கள் என்றும், எனவே ஸ்ரீ லங்காவில் இருந்து ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ள குழு எதையும் அனுப்பி வைக்க வேண்டாம் எனக் கோரி மிரட்டல் கடிதம் ஒன்று ஸ்ரீ லங்கா ஒலிம்பிக் குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இக்கடிதம் தூய வெள்ளையர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் "கூக்ளக்ஸ்கிளான்". இயக்கத்தால் அமெரிக்காவிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் இலச்சினையால் அலங்கரிக்கப்பட்டிருந்த கடிதத்தில் " மனிதர்களுக்குத்தான் விளையாட்டு, குரங்குகளுக்கு இல்லை" எனக் குறிப்பிட்டு இப்பயமுறுத்தல் விடப்பட்டுள்ளது.

இன வெறி பிடித்த ஸ்ரீ லங்கா அரசுக்கும், சிங்கள மக்களுக்கும் எதிராக உலகமே போர்க் கொடி தூக்கிவிட்டதென்பதின் அறிகுறியாகும். இன வெறி பிடித்த சிங்கள அரசின் பொய்ப் பிரசாரங்களை உலகநாடுகள் நம்பத் தயாராகவில்லை என்பதையே இவ்வெச்சரிக்கை கடிதம் எடுத்துக் காட்டுகிறது. வெளிநாடுகளில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கங்களின் அயராத பிரசாரத்தின் விளைவே இம்மிரட்டல் கடிதத்திற்குக் காரணம் என்று அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

## இந்த ஆடியிலும் தமிழின சங்காரமா?

இந்த வருடம் ஆடி மாதமும், கடந்த வருடத்தைப் போல தமிழர்கள் கொல்லப்படுவார்களா? மீண்டும் ஓர் இனக்கலவரம் நடக்க விடாது தவிர்ப்பதிலே அக்கறை செலுத்தும் ஸ்ரீ லங்கா அரசு பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் தமிழ் இளைஞர்களை வேட்டையாடத் திட்டமிட்டுள்ளது. இதன் ஆரம்ப நடவடிக்கையாக தமிழீழத்தின் பல்வேறு இடங்களில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களை இராணுவம் கைது செய்துள்ளது. அத்துடன் மட்டுநகர்-பகுதியில் இரு இளைஞர்களை இராணுவம் கடந்த வாரம் சுட்டு கொலை செய்துள்ளது. ஸ்ரீ லங்காவில் தோன்றியுள்ள சிங்கள இடதுசாரிகளின் தீவிரவாதத்திற்கு ஈடு கொடுக்க முடியாத அரசு தமிழ் மக்கள் மீது இராணுவத்தை மீண்டும் முடுக்கி விட்டுள்ளது. இந் நடவடிக்கையை காரணமாக வைத்து அப்பாவி தமிழ் மக்களைக் கொன்றொழிக்கவும் வர்த்தக நிலையங்களைச் சூறையாடவும் சிங்கள இராணுவம் திட்டமிட்டுள்ளது. எனவே தமிழ் மக்கள் விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியூயோர்க் தமிழ் — (3ம் பக்கத் தொடர்ச்சி.)

கூட்டமைப்பினை வலியுறுத்தி சகல நாடுகளிலும் வாழும் தமிழர் மத்தியில் பிரசாரம் செய்வதுடன் இயக்கங்களுக்கு நிதி உதவி வழங்கும் தமிழர்கள் கூட்டமைப்புக்காக இயக்கங்களை வற்புறுத்துமாறு தூண்ட வேண்டும். அத்துடன் வெளிநாடுகளில் உள்ள தமிழீழ அமைப்புகளையும் ஒருங்கிணைத்து அவற்றின் ஊடாக சகல நாடுகளிலும் தமிழீழ விடுதலைப் போராட்டம் பற்றிய உண்மை நிலையினை உலகிற்கு விளக்கி தொடர்ச்சியாக பிரச்சாரம் செய்யப்பட வேண்டும். எமது பிரச்சினையை ஐ.நா. வின் கவனத்தை ஈர்ப்பதற்கு இந்த நடவடிக்கை அவசியமாகும். இக்கருத்துகளை மகாநாட் மாநாட்டில் தெரிவு செய்யப்பட்ட குழுவினர் கவனத்தில் எடுப்பார்களா?

இராணுவ முகாமில் ஆசிரியர்களுக்கு மிரட்டல்

கிளிநொச்சி மகாவித்தியாலயம் ஆசிரியர்கள் சிலரை ஆனையிறவு இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்று தனித்தனியாக கிளிநொச்சி வங்கிக் கொள்ளை பற்றியும் மற்றும் தீவிரவாதிகளின் நடவடிக்கை பற்றியும் இராணுவம் விசாரித்த பின் ஆசிரியர்களை அழைத்து இந்தியா உங்களுக்காக படை அனுப்புமா? அப்படி இந்தியப் படை இங்கு வந்தால் நாம் சும்மா பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். 1971ஆம் ஆண்டு கிளர்ச்சியின் போது எமது சொந்த மக்கள் 15.000 பேரை கொன்[illegible] ஆகையால் உங்களைச் சும்மா விட்டு வைக்க மாட்டோம். இது வரை காலம் இதனைச் செய்யவில்லை. இனிமேல் நாம் இதனைத்தான் செய்யப்போகிறோம் என்று இராணுவத் தளபதி கூறினாராம்.

இப்படித்தான் வங்காள தேச விடுதலைப் போராட்டத்தின் போது பாகிஸ்தான் ஜனாதிபதி யகியாகான் கிழக்கு பாகிஸ்தான் மக்களைப் பார்த்து கூறினார். ஆனால், வங்காள தேச உதயத்தை அவரால் தடுக்க முடியவில்லை. இது போலவே தமிழீழம் சுதந்திர நாடாவதை ஆனையிறவு இராணுவத் தளபதியால் தடுக்க முடியாது.

25ம் திகதி ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழீழ விடுதலை அணி வேண்டுகோள்.

கடந்த வருடம் ஆடி மாதம் தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்ட வன்முறையைக் கண்டித்தும், வெலிக்கடைச் சிறையில் வைத்துக் கொலை செய்யப்பட்ட போராளிகளுக்கும் அநியாயமாக கலவரத்தின் போது கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களுக்கும் அஞ்சலி செலுத்து முகமாகவும் தொடர்ந்து நடை பெற்று வரும் ஸ்ரீ லங்கா அரசின் தமிழின படுகொலையைக் கண்டிக்கும் முகமாகவும் உலகிற்கும், ஸ்ரீ லங்கா அரசுக்கும் எம் நிலையை எடுத்துக்காட்டவும், இம்மாதம் 25 ஆம் திகதி தமிழீழமெங்கும் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு இத்தினத்தில் தமிழீழ விடுதலை அணி வேண்டு கோள் விடுத்துள்ளது. எனவே, இத்தினத்தில் வர்த்தகர்களே உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களை பூட்டி வையுங்கள். அரச, தனியார் ஸ்தாபனங்களின் ஊழியர்களே வேலைக்குச் செல்லாதீர்கள். மாணவர்களே கல்லூரிகளுக்கு செல்லாதீர்கள். வாகன சொந்தக் காரர்களே உங்கள் வாகனங்களை நிறுத்தி வையுங்கள்.

இன்றுள்ள இக்கட்டான சூழ்நிலையில் தீவிரவாத இயக்கங்கள் பொதுமக்களுக்கு இவ்வாறு விடுக்கும் வேண்டுகோளை செயற்படுத்துவதுதான் பொதுமக்களுக்குரிய முக்கிய கடமையாகும். ஏனெனில் முன்பு செய்ததைப் போன்று துண்டுப் பிரசுரங்கள் மூலமோ, அன்றி நேரடியாகவோ மக்களை சந்தித்து இவ்வாறான வேண்டுகோளை விடுக்கும் சூழ்நிலை இன்று இல்லை என்பதை பொது மக்கள் உணருவார்களென நம்புகிறோம். எனவே பொது மக்களாகிய நீங்களே காலத்திற்கேற்ப இவற்றை முன்னின்று நடாத்துவது உங்கள் கடமையாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் உயிரிழந்த அப்பாவிப் பொது மக்களுக்கு அஞ்சலி

கடந்த வருடம் ஆடி மாதம் 23ந் திகதி திருநெல்வேலியில் நடைபெற்ற இராணுவத்தின் மீதான புலிகளின் தாக்குதலால் 13 சிங்கள ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பின், மறுநாள் காலை மானிப்பாய், பண்டத்தரிப்பு, திருநெல்வேலி, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்களில் சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் கல்லூரி மாணவர்களும், அரச ஊழியர்களும் அடங்குவர். மனிதன் பத்திரிகை ஆசிரியர் அ. விமலநாதனும் இவர்களில் ஒருவராவார். இவர்கள் யாவருக்கும் எமது அஞ்சலியைத் தெரிவிக்கிறோம்.

இவ்விதழை மற்றவர்களுக்கும் [illegible] உதவவும்

[illegible] விடுதலை வெளியீட்டு குழு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org